| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பழனியம்மாள், க/பெ சீத்தாராமன் | அ.வ.எண்.131/2020 | 01.04.2026 |

**குறுக்கு விசாரணை**

1. எனது கணவர் பெயர் சீத்தாராமன் அவரது சகோதரர் பெயர் ஆறுமுகம் என்றால் சரிதான். தாவா சொத்து உட்பட பிற சொத்துக்களையும் சேர்த்து பாகம் பிரிக்கப்பட்டது என்றாலும், வடபுறம் உள்ள சொத்து ஆறுமுகத்திற்கும், தென்புறம் உள்ள சொத்து எனது கணவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது கணவர் சீத்தாராமன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விற்றுவிட்டால் எனக்கு மேற்படி சொத்தில் உரிமையில்லை என்றால் மேற்படி சொத்தை விற்கப்படவில்லை.
2. எனது பெயரில் தாவா சொத்தை பொறுத்து பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனது கணவர் 18.05.1971 ல் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து அதன் பின் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இதற்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு வயல் சம்மந்தாக தாக்கல் செய்யப்பட்டதாகும்.
3. எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது கணவர் இறந்து சுமார் 30 வருடம் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. அ.வ.எண்.275/2014

என்ற வழக்கை எனது கணவர் இறந்த பின்னர் தான் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது இந்த தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு பதிலாக தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கை தாக்கல் செய்த பின்னர் அது தொடர்பாக விளம்புகை பரிகாரம் கோர வேண்டுமென்றால் 3 வருடத்திற்குள் கோரியிருக்க வேண்டும் என்றாலும் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 02.06.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
பழனியம்மாள்

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.